**2025 செப்டம்பர்  மாதம் 04– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர்    :  17/2018**

MCOP No.: 17/2018 – சின்னக்கருப்பன் PW1 04.09.2025

த/பெ.ஊர்க்காத்தன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, 2ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து சம்பந்தப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டு, அது கோபு என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரதான மனுவில் பக்கம் 7ல் செல்லத்துரை என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி முன்னுக்குப்பின் முரணாக சொல்லியுள்ளதன் மூலம் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் இந்த வழக்கு விபத்தில் ஈடுப்பட்டுள்ளதா இல்லையா என்பது குறித்து சந்தேகம் எழுவதாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடைபெற்ற தேதியிலிருந்து எனது தந்தை ஊர்க்காத்தன் இறந்த தேதிவரை தொடர்ந்து சிகிச்சை எடுத்துவந்து இறந்துபோனார் என்பதை காட்டுவதற்கு எனது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பின்னர் அவரது உடலை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அவரின் பிரேத அறிக்கை எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் விபத்து சம்பந்தப்பட்ட குற்ற இறுதி அறிக்கை சட்டப்பிரிவுகள் 279, 337, 338 இ.த.ச.ன்படி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டதாக தெரியவருகிறது என்றால்

சரிதான். 304 ஏ இ.த.ச.ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதிகள் எனது தந்தை விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் இறக்கவில்லை என்பதை உறுதி செய்கிறது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு எனது தந்தை மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ பில்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்தவிதமான நஷ்ட ஈடும் கொடுக்கக் கடமைப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து யாருடைய கவனக்குறைவால், எவ்வாறு நடைபெற்றது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தானது எனது தந்தையின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிவந்த செல்லத்துரை என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரை தெரிந்தே 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் தனது வாகனத்தினை ஓட்ட அனுமதித்தது காப்பீட்டு பாலிசியின் விதிமீறல் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காப்பீட்டு பாலிசி விதிமீறல் இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது தந்தை விவசாயம் செய்து வந்தார் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தந்தை மாதம் வருமானம் ரூ.10,000/- பெற்று வந்தார் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தந்தை வயது முதிர்வின் காரணமாக விவசாய வேலை எதுவும் பார்க்காமல் வீட்டிலேயே இருந்து வந்தார் என்றால் சரியல்ல, வேலைக்கு போய் வந்தார்.

விபத்து எனது தந்தை வேலைக்கு செல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நானும், மற்ற மனுதாரர்களும், எனது தந்தையும் ஒரே குடும்பமாக வசித்து வந்தோம் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் மற்ற மனுதாரர்களும் விபத்து சமயத்தில் எனது தந்தையின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்றால் சரிதான். நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகவும் அதிகமாகவும் உள்ளது என்றும், மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 04.09.2025 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.09.04 18:59:40 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி(FAC). தேனி.
04.09.2025